பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 23 வியாழக்கிழமை 09.12.2021 கதிர் 262

## விபத்தில் காயமடைந்த ஆசிரியர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக் குள்ளானதில் படுகாயமடைந்திருந்த மீசாலையைச் சேர்ந்த ஆசிரியர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மீசாலை - புத்தூர் சந்தியில் கடந்த 28ஆம் திகதி இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் குறித்த விபத்து சம்பவம் இடம் பெற்றிருந்தது.

☞2

# சர்ச்சைக்குரிய முன்னாள் தளபதி கரன்னாகொடவுக்கு ஆளுநர் பதவி

## ஜனாதிபதி முன்னிலையில் இன்று சத்தியப் பிரமாணம்



பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வட மேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த பீல்ட் மார்ஷல் வசந்த கரன்னாகொட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து இன்று பதவிப்பிரமாணம் செய்தார்.

☞2

## சபாநாயகர் மௌனம் காத்தால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்

### எதிரணி பிரதம கொறடா பகிரங்க எச்சரிக்கை



சபாநாயகரே, இந்த சபைக்குள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் நாம் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்.

- இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பு விடுத்த பின்னர் அது தொடர்பில் கருத்து வெளியிட்ட லக்ஷமன் கிரியெல்ல எம்.பி. கூறியதாவது:-

☞2

## பட்டினியால் மக்கள் சாவடையும் அவலம்

### அரசு மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு



நாட்டு மக்களை இந்த அரசு பட்டினியால் சாகடிக்கப்போகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் நாட்டு மக்கள் பாரிய கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்தக் கடன் சுமையால் நாட்டினதும், மக்களினதும் பொருளாதாரம்

☞2

## எங்கு வேண்டுமானாலும் சென்று முறையிடுங்கள்!

### எதிரணிக்கு அரசு சவால்



நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சபாநாயகர் குழு அமைத்துள்ளார். அதனைவிடுத்து இது தொடர்பாக உயர்நீதிமன்றம், சர்வதேசநாடாளுமன்றத்துக்கு கொண்டுசெல்வதாக இருந்தால் அதனை முறையிடுங்கள். அதனை நாங்கள்

☞2

## கரைதுறைப்பற்றின் பட்ஜட் ஏகமனதாக நிறைவேற்றம்

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் கூட்டம் இன்று நடைபெற்றது.



தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து

☞2

## பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவித் தொகை

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பெற்றோரை இழந்த 20 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைக் கொவிட் - 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

☞2

## யாழ். மாநகர சபையின் பட்ஜட் ஏகமனதாக நிறைவேற்றப்படும்

### மேயர் மணி அதீத நம்பிக்கை



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் சபையின் உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

- இவ்வாறு யாழ். மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். நாயன்மார்கட்டு

☞2

## சகல பாடசாலைகளையும் மீள மூடிவைக்க நேரிடும்!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு

பாடசாலைகளுக்குள்ளும் கொரோனா கொத்தணிகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்த நிலைமை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் மீண்டும் அனைத்துப் பாடசாலைகளையும் மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை சகலரும் நினைவில்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின்

☞2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## எங்கு வேண்டுமானாலும் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கமாட்டோம் என்று சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற குழப்ப நிலை தொடர்பாக சபாநாயகர் குழுவொன்றை நியமித்தார். இது தொடர்பில் சபையில் ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் கருத்துத் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நியமித்த குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் பலரும் கருத்து முன்வைத்தார்கள். சபாநாயகருக்கு உள்ள அதிகாரத்துக்கமைய இந்தக் குழுவை நியமித்துள்ளார். அதன் பொறுப்புகளையும் தெரிவித்தார். அதேபோன்று சபையில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைப் பிரயோகம் தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் சபாநாயகர் தெரிவித்தார்.

அந்த வசனங்கள் உகந்ததல்ல என்பதால் சபையில் கூற முடியாது. நிலையியல் கட்டளையின் பிரகாரம் சபாநாயகரின் அறிவிப்பு உயர்வானது. அநுர பண்டாரநாயக்கவின் தீர்ப்புடன் அனைவரும் அன்று உடன்பட்டார்கள்.

சமல் ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்துக்கே உச்ச அதிகாரம் இருப்பதை உறுதிசெய்தார். நடந்த சம்பவங்களுக்குக் காரணமான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் சபாநாயகர் தொடர்பில் பயன்படுத்திய வார்த்தைகள் தொடர்பில் வெட்கப்படுகின்றோம். சபாநாயகருக்கு உடனடியாகவோ அல்லது நாடாளுமன்றம் கூடும் தினமொன்றிலோ அவரின் நிலைப்பாட்டை அறிவிக்கலாம். எந்த நிலையிலும் சபாநாயகர் ஒருபோதும் பொலிஸையோ வெளியாரையோ நாடாளுமன்றத்துக்குள் அழைக்கவில்லை. எமக்குப் பாதகமான முடிவுகளைக் கூட அறிவித்துள்ளார்.

ஆனால், கடந்த ஆட்சியில் இருந்த சபாநாயகர் அடிக்கடி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து கூட்டம் நடத்தினார். எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

தேவையானவர்கள் உயர் நீதிமன்றத்துக்குச் செல்லலாம். சர்வதேச நாடாளுமன்றத்துக்கும் செல்லலாம். அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. தற்போதே சர்வதேச நாடாளுமன்றத்துக்குக் கடிதம் அனுப்பி இருப்பதாகத் தெரியவருகின்றது – என்றார்.

## யாழ். மாநகர சபை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளப்புனரமைப்பு பணிகள் இன்று யாழ். மாநகர மேயர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு –செலவுத்திட்ட தயாரிப்பின்போது அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளையும் உள்ளடக்கியே தயாரித்து இருக்கின்றோம். ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகளை உள்ளடக்கிய வரவு - செலவுத் திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும் மாநகர சபையில் முன்வைக்கப்படுகின்ற வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என நான் பகிரங்கமாகவும் அன்பாகவும் ஒரு கோரிக்கையை விடுக்கின்றேன்.

மாநகர சபை வரவு - செலவுத்திட்டத்தைத் தோற்கடிக்கும் முகமாக கட்சித் தலைவர்கள் செயற்படமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன் - என்றார்.

## சகல பாடசாலை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாடசாலை கட்டமைப்புக்குள் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இதனால் சில இடங்களில் கொரோனாக் கொத்தணிகளும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுப் பவலைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் பாடசாலை நிர்வாகப் பிரிவினருடையதாகும். அதேபோன்று மாணவர்களும் , பெற்றோருக்கும் இந்தப் பொறுப்பு காணப்படுகிறது.

சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுமாறு பெற்றோர் தமது பிள்ளைகளை தொடர்ந்தும் அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலைகளுக்குள் சுகாதார விதிமுறைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீற வேண்டாம் என்று அறிவுறுத்துவது அத்தியாவசியமானதாகும் - என்றார்.

## கரைதுறைப்பற்றின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றினார். அதன் பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது.

உறுப்பினர்கள் 24 பேர் அங்கம் பெறும் குறித்த சபையின் இன்றைய அமர்வில் உறுப்பினர்கள் நால்வர் சமூகமளிக்கவில்லை.

நடைபெற்ற வாக்கெடுப்பின்போது உறுப்பினர்கள் 29 பேர் சமுகமளித்திருந்த நிலையில் அனைவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

## பெற்றோரை இழந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பதாரர்கள் தாய் அல்லது தந்தையின் இறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் சிறுவன் அல்லது சிறுமியின் பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, கிராம சேவையாளர் பிரிவு கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில், ‘கொவிட் – 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து கல்விப் புலமைப் பரிசில்களை வழங்குதல்’ என்று குறிப்பிடப்பட வேண்டும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, ‘செயலாளர், கொவிட் - 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## பட்டினியால் மக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரியளவில் வீழ்ச்சியடையும். ஐ.தே.க. ஆட்சியில் மூன்று வேளையும் உணவு உண்ட மக்கள் தற்போதைய ஆட்சியில் ஒரு வேளை உணவை உண்பதற்கும் சிரமப்படுகின்றனர்.

நல்லாட்சி அரசின் ஆட்சியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்பதற்கு உணவு இல்லை என்று மக்கள் எதிர்க்கட்சிகளிடம் குற்றம் சுமத்தியதில்லை. எனினும், தற்போது நாளாந்தம் மக்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்கியதால் நல்லாட்சி அரசை அவர்கள் கோழைகள் என்று வரையறுத்தனர். எனினும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசாகவே நாம் செயற்பட்டோம்.

பலருக்கு அது கோழைத்தனமாகத் தோன்றியது. அவ்வாறு எம்மைக் கோழைகள் என்று நினைத்தவர்களும் இப்போது இந்த அரசின் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எமது ஆட்சிக் காலத்தில் அரசை சமூக வலைதளங்களில் விமர்சிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அந்த வாய்ப்பும் இல்லை.

அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிடும் இளைஞர்கள் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறில்லை என்றால் குறித்த சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படுகின்றன. பொலிஸார் ஊடாக மக்களின் கருத்துச் சுதந்திரம் முடக்கப்படுகின்றது.

குரல் கொடுக்கக் கூடியவர்களை நாடாளுமன்றம் செல்ல மக்கள் அனுமதிக்கவில்லை. அவர்கள் செய்த செயலின் தீவிரத்தை மக்கள் இப்போது புரிந்துகொண்டுள்ளனர்.

இந்த அரசு முன்னோக்கிச் செல்லப் போவதில்லை. அரசின் முட்டாள்தனமான செயற்பாடுகளால் பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்குப் பெருமளவில் நிதியை ஒதுக்கும் இந்த அரசு தேவையான இடங்களில் பாலங்களை நிர்மாணித்துக் கொடுப்பதில்லை. இதன் காரணமாகவே கிண்ணியாவில் அந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

நிதி அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் செய்த போதிலும், அந்நாட்டிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசிடம் போதியளவு நிதி கையிருப்பில் இல்லை என்பதால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. சமையல் எரிவாயு சிலிண்டர்களை வீடுகளில் வைத்திருப்பவர்கள் வெடிகுண்டை வீட்டில் வைத்திருப்பதைப் போல் அச்சத்துடனேயே இருக்கின்றனர்.

இலங்கையில் மேற்கொண்டிருந்த முதலீட்டினை சீனா தற்போது மாலைதீவுக்கு வழங்கியுள்ளது. மறுபுறம் இந்தியாவும் எவ்வித ஒத்துழைப்புக்களையும் வழங்கவில்லை.

இதன் காரணமாகவே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க , நிதி அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். எனினும், அதற்கு அரசிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

நாட்டில் பாரிய டொலர் தட்டுப்பாடு நிலவுகின்றது. சர்வதேச ஒத்துழைப்புகள் பூச்சியமான நிலையில் உள்ளன. இலங்கையின் நிலையற்ற செயற்பாடுகளால் சீனாவும் சினம் கொண்டுள்ளது. மறுபுறம் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை மீது சினம் கொண்டுள்ளன.

இவ்வாறான நாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய முடியும்? கிணற்றுத் தவளை போன்ற பொருளாதாரத்தில் ஒருபோதும் முன்னேற முடியாது.

கொரோனாத் தொற்றின் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஏனைய பல நாடுகளும் பொருளாதார நெருக்கடியைச் சரியாக முகாமைத்துவம் செய்துள்ளன. இலங்கையில் அவ்வாறான பொருளாதார முகாமைத்துவம் இல்லை.

ஏனைய நாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கை பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் - என்றார்.

## சபாநாயகர் மௌனம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியமைக்கு நன்றி. குழு நியமனம் பற்றியும் குறிப்பிட்டீர்கள். அந்தக் குழு நியமனத்தின் எதிர்பார்ப்பு குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. இருந்தாலும் சரியான திசையில் செல்லும் என நம்புகின்றோம்.

நாடாளுமன்றத்தில் இரு நாள்களில் (டிசம்பர் 03, 04) நடந்த சம்பவங்களுள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். ஏனெனில் நீங்கள்தான் சாட்சியாளர். சபாபீடத்தில் இருந்து அவதானித்தீர்கள்.

எனினும், நேரில் கண்ட சம்பவங்கள் பற்றி நீங்கள் கட்சித் தலைவர்கள்கூட்டத்தின்போதும் எதுவும் அறிவிக்கவில்லை.

நாடாளுமன்ற சிறப்புரிமை சட்டத்தின் பிரகாரம், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சபைக்குள்ளோ அல்லது தெரிவுக்குழுவிலோ தாக்குதல், திட்டமிட்ட அடிப்படையிலான இடையூறுகள் மற்றும் அவமதிப்பு இடம்பெற்றால் அவை உயர் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றங்களாகும்.

பிரச்சினையை நாடாளுமன்றத்துக்கு வெளியில் எடுத்துச் செல்ல நாம் விரும்பவில்லை. இதற்குள்ளேயே தீர்த்துக்கொள்ளவே விரும்புகின்றோம். எனவே, நேரில் கண்ட விடயங்கள் தொடர்பில் நீங்கள் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். இல்லையேல் விரும்பமில்லாவிட்டாலும்கூட இந்தப் பிரச்சினையை உயர்நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல நேரிடும். ஏனெனில் இந்த நாடாளுமன்றத்தை ‘மிளகாய்தூள்’ குழுவுக்கு நிர்வகிக்க இடமளிக்க முடியாது. இவர்களே கடந்த நாடாளுமன்றத்தையும் குழப்பினர் - என்றார்.

## சர்ச்சைக்குரிய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்துக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கைகளின்போது கடற்படைத் தளபதியாக விளங்கிய வசந்த கரன்னாகொட, தாய்நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவராவார். அத்துடன், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராகவும் அவர் சேவையாற்றியுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராகவிருந்த ராஜா கொல்லுரேவின் மறைவை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே, வடமேல் மாகாணப் புதிய ஆளுநர் பதவிக்கு வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் காயமடைந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது விபத்துக்குள்ளான மீசாலையை சேர்ந்த க.சுதாகரன் (வயது - 36) என்பவர் படுகாயமடைந்தார்.

இதையடுத்து உடனடியாக மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதி முறையான ஜனநாயகம்

**பெரும் பிரச்சாரத்தோடு சர்வதேச ரீதியில் அமெரிக்கா முன்னிலைப்படுத்திய – அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் ஜனநாயகத்துக்கான உச்சிமாநாடு இன்று ஆரம்பமாகின்றது.**

**உலகின் நூற்றிப்பத்து நாடுகள் இதில் கலந்து கொள்கின்றன. அதில் இலங்கை இல்லை. இலங்கையை இந்த நிகழ்வில் சேர்த்துக் கொள்ளாமல் அமெரிக்கா உதாசீனப்படுத்தி புறம் ஒதுக்கியுள்ளது. இலங்கையில் ஜனநாயகப் பண்பியல்புகள் சரிவரப் பேணப்படவில்லை என்ற கருத்தில் இலங்கையை இந்த சர்வதேச நிகழ்வில் புறம் ஒதுக்கி இலங்கையின் எதேச்சதிகாரப் போக்குடைய அரசியல் தலைமைக்கு வொஷிங்டன் ஆட்சியாளர்கள் ஒரு பாடம் போதிக்க முயன்றிருக்கின்றனர் என்று சில தரப்புகள் இவ்விடயத்துக்கு அர்த்தம் கற்பிக்கின்றன. இந்தப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகள் பலவற்றையும் இந்த உச்சி மாநாட்டுக்கு அழைத்த அமெரிக்கா இலங்கையை வேண்டுமென்றே புறம் ஒதுக்கியுள்ளதாகவே படுகின்றது.**

**எனினும் ஜனநாயக விரோதப் போக்கிலும், எதேச்சதிகாரப் பண்பியல்புகளிலும் ராஜபக்ஷ ஆட்சியாளர்களை விட மோசமான போக்கைக் கடைப்பிடிக்கும் பல உலக நாடுகளை இந்த மாநாட்டிற்கு அழைத்திருக்கும் அமெரிக்கா, இலங்கையை மட்டும் புறம் ஒதுக்கியிருப்பது சின்ன விடயம் அல்ல. கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கு நெற்றிக்கு நேராகத் தாக்குதல் நடத்தியமை போன்ற நடவடிக்கை இது.**

**ஜனநாயகம் உயர்ந்த ஆட்சிமுறைமையாக உலகெங்கும் போற்றப்படுகின்றது. மதிக்கப்படுகின்றது.**

**'வெறும் ஜனநாயகம்' என்பது உயிரற்ற உடல் கோது போன்றது. நெறிமுறையானது அல்ல. அது பல சமயங்களில் எதேச்சதிகாரத்துக்கு இலகுவில் வழி திறந்து விடும் ஆபத்தான மார்க்கமும் கூட.**

**வெறும் அட்சர கணித அடிப்படையில் பெரும்பான்மை என்ற கோட்பாட்டை மட்டுமே கவனத்தில் கொண்ட ஒரு முறைமை அது.**

**'மக்களினால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி' என்றெல்லாம் விதந்துரைக்கப்பட்டாலும் அது ஒழுங்கு முறையான – ஒழுக்கமான – ஆட்சியைத் தருமா என்று கேட்டால் சந்தேகமான பதிலே கிட்டும்.**

**பெரும்பான்மைத் தீர்மானம் என்பது வேறு. நீதி முறைமை என்பது வேறு. இரண்டும் எப்போதும் ஒன்றுபட்டிருக்கும் என்பது தவறான கற்பிதமாகும். பெரும்பாலும் அவை வேறுபட்டு, வெவ்வேறு தடங்களில் நிற்பதையே நாம் காண்கிறோம்.**

**எண்ணிக் கணியத்தின் அடிப்படையில் அமையும் ஜனநாயகம் பயனற்றது. பொருத்தமற்றது. தவறானதும் கூட.**

**நீதி முறைமையான ஜனநாயகமே உண்மையில் நிலைநாட்டப்பட வேண்டும். ஜனநாயகத்தின் பெயரிலான எதேச்சதிகாரம் அல்ல. ஆனால் உலகமும், நாடுகளும், மக்கள் கூட்டத்தினரும் வெறும் எண்ணிக்கை கணியத்தில் தீர்மானிக்கப்படும் ஜனநாயகத்தை உயர்வானது என்று போற்றி மதித்துக் கொண்டிருக்கின்றனர்.**

**ஜனநாயக முறைமையின் கீழான பெரும் சீரழிவுகளுக்கு பெரும்பாலும் இத்தகைய பொறுப்பற்ற சிந்தனைப் போக்கே காரணமாக அமைவது கண்கூடு.**

**இன்று அமெரிக்கா காட்டும் ஜனநாயகத்துக்கான உச்சிமாநாடு கூட எண்ணிக்கைக் கணியத்தின் அடிப்படையிலான தீர்மானம் குறித்தே அமைகின்றது. 'நீதிமுறைமையிலான ஜனநாயகம்' பற்றி அது பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை**

# கொவிட் கொத்தணி உருவாகும் அபாய நிலையில் பாடசாலைகள்

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



பாடசாலைகளில் கொவிட் கொத்தணிகள் எதுவும் இதுவரையில் உருவாகவில்லை என சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பளார் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுமார் 40 லட்சம் பாடசாலை மாணவ, மாணவியரில் சுமார் 400 முதல் 500 பேர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டு சூழலிலிருந்தே அதிக எண்ணிக்கையிலானவர்கள் நோய்த் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலை மாணவ, மாணவியருக்கு இடையில் கொவிட் தொற்று வேகமாகப் பரவவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் குறித்த சுகாதார வழிகாட்டல்கள் உரிய முறையில் பாடசாலைகளில் பின்பற்றப்பட்டால் கொத்தணிகள் உருவாகும் சாத்தியம் கிடையாது எனவும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளில் கொவிட் சுகாதார வழிகாட்டல்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை என ஆசிரியர் சங்கங்கள் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு பிள்ளை கடுமையாக நோய் வாய்ப்பட்டால் அதனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்க வேண்டும். மாறாக வீட்டில் கசாயங்களை வைத்து கொடுத்து வீட்டில் பராமரிப்பது பொருத்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம்!

## வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு மத்தியவங்கி அறிவுறுத்து

சட்டவிரோதமாக நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம். உரிய முறையில் நாட்டுக்குப் பணத்தை அனுப்புவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சட்டத்துக்குப் புறம்பாக நாட்டுக்கு பணம் அனுப்பும் கணக்குகளைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற கணக்குகள் தடை செய்யப்படுகின்றன. சட்டவிரோதமாக நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம். உரிய முறையில் நாட்டுக்குப் பணத்தை அனுப்புவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சட்டவிரோத கணக்குகளுக்குத் தடை விதிப்பதற்கான அதிகாரம் காணப்படுகின்றது. யுத்த காலத்திலும் இவ்வாறான கணக்குகள் தடை செய்யப்பட்டன.

எனவே, உரிய முறையில் பணத்தை அனுப்புமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு செந்தில் தொண்டமான் அவசரக் கடிதம்

பாகிஸ்தானில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட பிரியந்த குமார தொடர்பான விசாரணைகளில் நம்பிக்கையிழந்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அவர் அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பாகிஸ்தானில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட இலங்கையர் தொடர்பில் பாகிஸ்தான் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட கருத்து, பாகிஸ்தான் அரசாங்கம் இந்த கொலை சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கும் விசாரணைகளில் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.

இந்த கொடூரச் சம்பவம் இடம்பெற்று ஓரிரு மணித்தியாலங்களிலேயே பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முழுமையான விசாரணைகளை ஆரம்பித்தமையை வரவேற்கின்றேன். எனினும், பொலிஸ் உத்தியோத்தர்கள் முன்னிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதை நிவர்த்தி செய்யும் வகையில், உடனடியாக 130 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டமை அந்த நாட்டின் மீதான நம்பிக்கையைத் தக்க வைத்தது. பிரதமர் இம்ரான் கான் இவ்வாறு துரித கதியில் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளையில், பாகிஸ்தானின் பாதுகாப்பு தொடர்பில் உயரிய பதவியிலுள்ள அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் கட்டாக், பிரதமரின் நடவடிக்கைகளை மீறி குற்றவாளிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பகிரங்கமாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டமை, விசாரணை மீதான நம்பிக்கையை இழக்க செய்துள்ளது. இலங்கை – பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான பல தசாப்த நட்புறவானது, சில மதவாத கொலைகாரர்களால் பாதிக்கப்படக்கூடாது என்பதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு தொடர வேண்டும் என்பதே எமது நாட்டவரின் எதிர்பார்ப்பு. எனினும், பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் கட்டாக்கின் கருத்தினூடாக ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மையை இல்லாது செய்து விசாரணைகள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கு, சர்வதேச கொள்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் செந்தில் தொண்டமான், பாகிஸ்தான் பிரதமரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.



# ஒமிக்ரோன் தோற்றினால் உயிரிழப்பு அதிகரிக்கும் எச்சரிக்கை விடுக்கின்றது ஐரோப்பிய யூனியன்

ஒமிக்ரோன் வைரஸால் வரும் வாரங்களில் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் கொரோனா வைரஸ் பாதிப்பு வேகமாக அதிகரிக்கும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அளவும், உயிரிழப்பும் அதிகரிக்கும் என்று ஐரோப்பிய நாடுகளுக்கான நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு எச்சரித்துள்ளது.

ஒமிக்ரோன் வைரஸைக் கட்டுப்படுத்த செலுத்தப்படும் தடுப்பூசிகள் போதுமானதாக இல்லை, தடுப்பூசி செலுத்தாதவர்களும் அதிகமாக இருப்பதால், வரும் வாரங்களில் பாதிப்பு அதிகரிக்கும் என எச்சரித்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் உலகில் பல நாடுகளுக்கும் பரவி வருகிறது. இதுவரை 39 நாடுகளுக்குப் பரவிவிட்டதாக உலக சுகாதார அமைப்பின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது. டெல்டா வைரஸின் பாதிப்பிலிருந்தே மீளாத ஐரோப்பிய நாடுகள், ஒமிக்ரோன் வைரஸ் குறித்து அஞ்சியுள்ளன. இதனால், தென் ஆபிரிக்கா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வரும் மக்களுக்கும், விமானங்களுக்கும் தடை விதித்துள்ளன.

இந்நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்கான நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு அமைப்பு அடுத்துவரும் வாரங்களில் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஒமிக்ரோன் தொற்றின் தீவிரம் அதிகரிக்கும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும், உயிரிழப்பும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம் என எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கான நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு அமைப்பின் இயக்குநர் ஆன்ட்ரியா அமான் பிரசெல்ஸ் நகரில் நேற்று ஐரோப்பிய யூனியன் நாடுகளின் சுகாதாரத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசினார்.

அவர் கூறியதாவது:

வரும் வாரங்களில் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றின் தீவிரம் அதிகரிக்கலாம். மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை, அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும். உயிரிழப்பும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

ஆதலால், விரைவாகவே மக்கள் கூடுமிடங்களான மதுபார்கள், ரெஸ்டாரன்ட்கள் போன்றவற்றை மூடி லொக்டவுண் விதிப்பதும், கரோனா தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதும் அவசியம். ஒமிக்ரோன் வைரஸால் ஒட்டுமொத்தச் சூழலும் கவலைக்கிடமாக மாறக்கூடும்.

ஐரோப்பிய யூனியனில் தற்போது 19 நாடுகளில் ஒமைக்ரான் வைரஸ் பரவியிருக்கிறது. 274 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இதுவரை ஒமைக்ரான் வைரஸால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டதாகவோ அல்லது உயிரிழப்பு ஏற்பட்டதாகவோ சம்பவம் ஏதும் நடக்கவில்லை, அறிக்கை வரவில்லை. ஆனால், தொடக்க நிலையின் சூழலை வைத்து எந்த முடிவுக்கும் வரமுடியாது எனத் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கான சுகாதார ஆணையர் ஸ்டெல்லா கைரியாகிடெஸ் கூறுகையில், ஐரோப்பிய யூனியனில் 6 நாடுகளில் ஒட்டுமொத்த தடுப்பூசி செலுத்துவது 55 சதவீதத்துக்கும் கீழாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே ஆஸ்திரியா நாடு கடந்த ஒரு வாரமாக நாடு முழுவதும் லொக்டவுண் அறிவித்த நிலையில் இந்த வாரத்துடன் முடிகிறது. இதில் கொரோனாவில் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் வெளியுலகிற்கு அதிகமாக வர வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

போலந்து நாட்டு அரசாங்கம், பள்ளி, கல்லூரிகளில் மீண்டும் ஒன்லைன் வகுப்புகளைத் தொடங்கியுள்ளது. சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் கட்டாயமாகத் தடுப்பூசி செலுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

# தன்பாலின திருமணத்துக்கு சிலி நாடாளுமன்றம் ஒப்புதல்



பாரம்பரியமான கத்தோலிக்க நாடான சிலி நாட்டில் தன்பாலின திருமணத்தை அனுமதிக்கும் முக்கிய சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று, நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தச் சட்டம், தன்பாலினதம்பதிகள் குழந்தைகளைத் தத்தெடுக்க உதவுகிறது.

இந்தப் பிரேரணையை அதிபர் செபாஸ்டியன் பினேரா ஆதரித்தார். அவர் அதைச் சட்டமாகக் கையெழுத்திட வேண்டும். ஆனால், அவருடைய பழமைவாத கூட்டணி உறுப்பினர்களின் விமர்சனத்திற்கு இந்த பிரேரணை உள்ளானது.

சிலியின் எல்.ஜி.பி.டி. சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நீண்ட காலமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால், 2017-ம் ஆண்டு முதல் நாடாளுமன்றம் இயற்றவிடாமல் முடக்கி வந்தது.

சிலி 2015 ஆம் ஆண்டு தன்பாலின தம்பதிகளுக்கு இடையே இருக்கும் சிவில் யூனியன்களை அங்கீகரித்தது. இது அவர்களுக்கு சில சட்டரீதியான பலன்களையும் வழங்கியது.

# சுவிட்ஸர்லாந்தில் வலி இல்லாமல் தற்கொலை செய்வதற்கான புதிய இயந்திரத்திற்கு அனுமதி!



சுவிட்ஸர்லாந்து தனது பயனர்களை வலியற்ற மற்றும் அமைதியான முறையில் ஒரு நிமிடத்தில் இறக்க அனுமதிக்கும் 'தற்கொலை இயந்திரத்தை' சட்டப்பூர்வமாக்கியுள்ளது

சவப்பெட்டி வடிவிலான 'சார்க்கோ' காப்ஸ்யூல் பயனர் கண்களை சிமிட்டுவதன் மூலம் உள்ளே இருந்து கூட இயக்க அனுமதிக்கிறது.

லாக்-இன் சிண்ட்ரோம் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் கண் சிமிட்டினால் உள்ளே இருந்து இயந்திரத்தைப் பயன்படுத்தலாம்.

லாக்-இன் சிண்ட்ரோம் என்பது ஒரு நரம்பியல் கோளாறு ஆகும். இது கண் அசைவைக் கட்டுப்படுத்துவதைத் தவிர உடலின் அனைத்துப் பகுதிகளிலும் தன்னார்வத் தசைகள் முழுமையாக செயலிழந்துவிடும்.


கருணைக்கொலை சாதனம் ஹைபோக்ஸியா மற்றும் ஹைபோகாப்னியாவை தூண்டுவதன் மூலம் அதன் பயனருக்கு வலியற்ற மரணத்தை உறுதியளிக்கிறது.

ஹைபோக்ஸியா என்பது திசு மட்டத்தில் ஒட்சிசன் வழங்கல் இல்லாத ஒரு நிலை, அதேசமயம் ஹைபோகாப்னியா என்பது மனித இரத்தத்தில் குறைக்கப்பட்ட கார்பன் டை ஒக்சைட் நிலை, இது மரணத்திற்கு வழிவகுக்கிறது. தற்கொலை இயந்திரத்தை கண்டுபிடித்த எக்ஸிட் இன்டர்நேஷனல் என்ற இலாப நோக்கற்ற அமைப்பின் இயக்குனர் மருத்துவர் பிலிப் நிட்ச்கே, அடுத்த ஆண்டு சுவிட்ஸர்லாந்தில் கருணைக்கொலை சாதனம் பயன்பாட்டுக்கு கிடைக்கும் என்று நம்புகிறார்.

கடந்த 2020ஆம் ஆண்டில், சுமார் 1,300 பேர் கருணைக்கொலை அமைப்புகளின் சேவைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

# அணுசக்தி தொடர்பான பேச்சு ஈரானுடன் ஆரம்பம்

## ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில்



பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கான மீண்டும் இன்று (வியாழக்கிழமை) நடைபெறுகின்றது.

ஈரானுக்கும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள வல்லரசு நாடுகளுக்கும் இடையே ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் மீண்டும் இன்று ஆரம்பமாகின்றது.

இந்த பேச்சுக்கு வரும் ஈரான், நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய யோசனைகளை முன்வைக்க வேண்டும் என ஐரோப்பியக் குழுத் தலைவர் என்ரிக் மோரா கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

அதற்குப் பதிலாக, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக வல்லரசு நாடுகள் ஒப்புக் கொண்டன.

ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது கையெழுத்தான அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுகிறேன் என அடுத்து வந்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். அத்துடன், ஒப்பந்தம் காரணமாக விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது அவர் மீண்டும் விதித்தார்.

அதற்கு பதிலடியாக, ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. இதனால் அந்த ஒப்பந்தம் முறிந்துபோகும் அபாயம் நிலவி வருகிறது. அந்த ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கான பேச்சு வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் பல கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# பிபின் ராவத்தின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் இரங்கல்!

முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத்தின் மறைவுக்கு பாகிஸ்தான் இராணுவ உயர் அதிகாரிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதன்படி பாகிஸ்தான் இராணுவ செய்தி தொடர்பாளர் மேஜர் ஜெனரல் பாபர் இப்திகர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய இராணுவ முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 13 வீரர்கள் அகால மரணம் அடைந்தமை அதிர்ச்சி அளிக்கிறது.

அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு பாகிஸ்தான் இராணுவ கூட்டு கமிட்டியின் தலைவர் நதீம் ராஸா மற்றும் இராணுவ தளபதி ஜெனரல் குவாமர் ஜாவேத் பாஜ்வா இரங்கல் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் நிகோலெய் குதாசேவ், இந்தியா-ரஷ்யா இடையேயான சிறப்பான உறவுகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய ஒரு நெருங்கிய நண்பரை ரஷ்யா இழந்துவிட்டது. இந்த சோகமான நிகழ்வில் இந்தியாவுடன் இணைகிறோம் என்று கூறியுள்ளார்.

இதைப்போல இஸ்ரேல் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யகு, இராணுவ அமைச்சர் பென்னி காண்ட்ஸ், ஆஸ்ரேலிய தூதரகம், பிரெஞ்சு தூதர், சிங்கப்பூர் தூதரகம், மாலைத் தீவு அதிபர் இப்ராகிம் சொலி, முன்னாள் அதிபர், தாய்வான் வெளியுறவு அமைச்சகம், பூடான் பிரதமர் என பல நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

# விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டரின் கறுப்பு பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது

முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் பயணித்த ஹெலிக்கொப்டரின் கறுப்பு பெட்டி கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைகொண்டு விபத்துக்கான காரணம் குறித்த விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# டெல்லிக்கு கொண்டுசெல்லப்படும் பிபின் ராவத்தின் உடல்!

ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த இராணுவத் தளபதி பிபின் ராவத்தின் உடல் இன்று (வியாழக்கிழமை) டெல்லிக்கு கொண்டுசெல்லப்படவுள்ளது.

இதனையடுத்து நாளைய தினம் அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட உள்ளது. அதன் பிறகு டெல்லி கன்டோன்மன்டில் இராணுவத் தளபதி நரவனே முன்னிலையில் இறுதிச்சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிபின் ராவத்தின் பதவிக்கு நரவனேயின் பெயர் பரீசிலனை!



இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்துள்ளமையைஅடுத்து அவரது பதவிக்கு ஜெனரல் நரவனேயின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்குலடாக்கில்சீனாவுடன் இந்தியப் படைகள் நேருக்கு நேர் நிற்கும் சூழ்நிலையில் முப்படைகளின் ஒத்துழைப்பும் செயல்திறனும் முக்கியமான தாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், நீலகிரி மாவட்டம்காட்டேரியில்நிகழ்ந்த ஹெலிக்கொப்டர் விபத்தில் முப்படைகளின் தளபதி பிபின் ராவத் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர். அவரின் மறைவைத் தொடர்ந்து அப்பதவிக்கு நரவனேயை நியமிக்க பாதுகாப்பு அமைச்சகம் பரிசீலித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் பனிப்பொழிவு ஆரம்பமாகியது சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வரவு



காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கத்தொடங்கியுள்ள நிலையில் அவர்கள் பயன்படுத்துவதற் காக படகு வீடுகள் புதுப்பிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளன.

காஷ்மீரில் குளிர்காலம் தொடங்கி யுள்ள நிலையில் பனிப்பொழிவும் அதிகரித்துள்ளது. பனிப்பொழிவு காலத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் அங்கே வருகைதரத் தொடங்கியுள்ளமையால் அவர்களுக்காக படகு வீடுகள் சுத்தப்படுத்தப்பட்டு, அலங்கரிக்கப்பட்டு வரவேற்கத் தயாராகவுள்ளன.

காஷ்மீரில் குல்மார்க் பகுதியில் நேற்று (-7) பாகை செல்சியஸ் குளிர் பதிவாகியிருந்தது. இதற்கிடையே உத்தரகண்ட், இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் கடும் பனிப் பொழிவு நிலவி வருகிறது.

புகழ்பெற்ற கேதார்நாத் கோயிலைப் பனி சூழ்ந்து காணப்படுகிறமையும் குறிப்பிடத்தக்கது.

# விபத்தின் பின்னணியில் எதிரிகளின் சதியா?



விசாரணைகள் ஆரம்பம்

விபத்தில் சிக்கிய இராணுவ ஹெலிக்காப்டர் எம்.ஐ., - 17 வி5 ரகம். ரஷ்யாவின் ஹசான் ஹெலிக்கொப்டர் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 4.5தொன்எடைவரைசரக்குகளை கையாளும் திறன் கொண்டது.

உலகின் அதிநவீன போக்குவரத்து ஹெலிக்கொப்டராகவும் உள்ளது. மணிக்கு 260 கி.மீ., வேகத்தில் செல்லும். தேடுதல் மற்றும் மீட்பு பணிக்காக இந்த ஹெலிகாப்டர் பயன்படுத்தப்படுகிறது.

கடும் பனி மூட்டம், மழை, வெயில் என, எல்லா காலநிலையிலும் சிறப்பாக செயல்பட கூடியது. இதனால், குன்னூர் அருகே நடந்த விபத்து, இராணுவவட்டாரங்களில் பல்வேறு சந்தேகங்களை கிளப்பி உள்ளது. விபத்தின்பின்னணியில், எதிரிகளின் சதி இருக்கலாமா என்ற கோணத்திலும் விசாரணை நடக்க உள்ளது.



# மின்சார திருத்த சட்டம் பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

சென்னை மத்திய அரசு புதிதாக கொண்டு வர திட்டமிட்டுள்ள, மின்சார திருத்த சட்ட மசோதாவை திரும்பப் பெற வேண்டும்' என, பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு, 2003ம் ஆண்டு மின்சார திருத்த சட்டத்தில் திருத்தங்கள் செய்து, புதிய சட்ட திருத்த முன்வடிவை கொண்டு வர உத்தேசித்துள்ளது. இந்த சட்ட திருத்தம், தனியார் மின் விநியோக நிறுவனங்களுக்கு சாதகமாகவும், பொதுத்துறை நிறுவனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகை யிலும் உள்ளது.

புதிய மசோதா, தனியார் நிறுவனங்கள் எவ்வித முதலீடும் செய்யாமல், எவ்வித பராமரிப்பு பொறுப்பையும் ஏற்காமல் பொதுத் துறை நிறுவனத்தின் மின் கட்டமைப்பை பயன்படுத்த அனுமதி அளிக்கிறது. மின் விநியோகத்தில் ஈடுபடும் தனியார் நிறுவனங்கள், சமூக நோக்க மின்றி, வணிக மின் நுகர்வோர் அமைந்துள்ள பகுதிகளை மட்டும் தேர்வு செய்ய அனுமதி அளிக் கிறது.

இதனால், மானியம் பெறும் மின் நுகர்வோருக்கு மட்டும், மின் விநியோகம் செய்ய வேண்டிய நிலை, அரசு பொதுத்துறை நிறுவனத்திற்கு ஏற்படும். மேலும், இந்த சட்ட திருத்த மசோதா, மாநில அரசின் அதிகாரத்தை பறிப்பதாக உள்ளது. எனவே, இந்த சட்ட திருத்த முன்வடிவை திரும்பப் பெற வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்-

# இன முரண்பாடுகளை தீர்ப்பதன் மூலமே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



அரசாங்கத்தை கவிழ்க்கவோ அல்லது விரட்டியடிக்கவோ நாம் முயற்சிக்க வில்லை. நாட்டின் பிரச்சினைகளை தீர்த்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவே விரும்புகின்றோம்.

அதற்கான சந்தர்ப்பத்தை எமக்கும் வழங்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் சபையில் தெரிவித்தார்

நாட்டின் இன முரண்பாடுகளை தீர்ப்பதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு மற்றும் பிரம்புகள், பித்தளை மட்பாண்டங்கள், மரப்பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவற்றை கூறினார்,

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு கிழக்கில் தொழிற்சாலைகளை புதிதாக நிர்மாணிக்கவும், இருக்கின்ற தொழிற்சாலைகளை புனரமைக்கவும் தொடர்பாடல் ஒன்றினை உருவாக்க வேண்டும்.

தலைமன்னார், இராமேஸ்வரம் படகு சேவை, வடக்கு கிழக்கின் விமான நிலையங்களை புனரமைத்தல், ரயில் சேவைகளை முன்னெடுக்க வேண்டும். துறைமுகங்கள், விமான நிலையங்களுடன் விரைவாக தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல் நாம் வெளிநாடு களில் சென்று இலங்கைக்கு முதலீடுகளை செய்யுமாறு கூறினோம், ஆனால் அவர்கள் கேட்கும் விடயம் ஒன்றுதான், ஒரே நாடு ஒரே – சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் நாட்டில் எப்போதும் குண்டு வெடிக்கலாம் என அச்சுறுத்தும் நிலையில் நாம் எவ்வாறு அங்கு வருவது என கேட்கின்றனர். ஆகவே இந்த நிலைமையில் எதிர்காலத்தில் நாட்டில் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமையே ஏற்படும்.

இன்று பாகிஸ்தானில் வேறு இனக்குழு மூலமாக இலங்கைப் பிரஜை ஒருவர் அடித்துக்கொல்லப்பட்டமை போன்று இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் பல கொலைகள், அழிவுகள் இடம்பெற்றுள் என. தமிழர்கள் அடித்தும், எரித்தும் கொல்லப்பட்ட வரலாறுகள், அதற்கான ஆதாரங்களுடன் உள்ளன. தமிழர் ஆயுதம் ஏந்த முன்னர் நீண்டகால அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தனர். அரசாங்கத்துடன் பேசி தீர்க்க முடியாத நிலையிலேயே ஆயுதம் எந்த நேர்ந்தது. பலவீனமான, கவனயீனம் காரணமாக அடிப்படைவாதமும், பயங்கரவாதமும் நாடுகளுக்கு இடையில் பரவுவதாக ஜனாதிபதி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இலங்கையிலும் அதுவே இடம்பெற்றுக் கொண்டுள்ளது. பௌத்த அடிப்படைவாதமே இலங்கையிலும் பரவிக்கொண்டுள்ளது. ஜனாதிபதி ஊடக மையத்தின் மூலமாகவே கீழ்த்தரமான பதிவுகள் பதியப்படும் நிலைமை நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப, நாட்டின் இன முரண்பாடுகளை தீர்க்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லாது நாட்டைக் கட்டியெழுப்ப முடியும், அதற்கு முதலில் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை கைவிட வேண்டும். இன முரண்பாடுகளை தீர்க்க வேண்டும்.

இன முரண்பாடுகளை தீர்க்க எமக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும், நாம் அரசாங்கத்தை கவிழ்க்கவோ அல்லது வீட்டுக்கு அனுப்பவோ முயற்சிக்கவில்லை. நாட்டின் பிரச்சினைகளை தீர்த்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவே விரும்புகின்றோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

# கல்முனை மாநகர சபையின் பாதீடு 15 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது



கல்முனை, டிசெ. 09

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையில் 2 ஆசனங்கள் வெற்றிடமாகவுள்ள நிலையில், 39 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

பாதீட்டுக்கு ஆதரவாக 21 உறுப்பினர்களும், 6 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

5 உறுப்பினர்கள் பாதீட்டின் வாக்கெடுப்பின் போது நடுநிலை வகித்தமையுடன், 7 பேர் சபைக்குச் சமூகமளித்திருக்கவில்லை. இதனடிப்படையில், கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 15 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

## ஏறாவூர் நகர சபையின்

# சந்தை வியாபாரிகளுக்கான மீள் விண்ணப்பம் கோரல்

ஏறாவூர் நகர சபையின் புதிய சந்தை வியாபாரிகளுக்கான மீள் விண்ணப்பம் கோரல் தொடர்பான இறுதி அறிவித்தலொன்றை ஏறா வூர் நகரசபை வெளியிட்டுள்ளது.

2021.11.05 ஆம் திகதிய 2253 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் மூன்று மொழி க ளிலும் பகுதி IV (ஆ) யில் குறிப் பிடப்பட்டுள்ள புதிய சந்தை தொடர் பான விளம்பரத்திற்கமைவாக எதிர்வரும் 2021.12.31 ஆம் திகதிக்கு முன் இச்சந்தையில் வியாபாரம் செய்வதற்கான குத்தகை உரிமையினை பெற்றிருந்தவர்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்து குறித்த சந்தையில் வியாபாரம் செய்ய விரும்பின் குத்தகை உரிமையை பெற்றிருந்தமை தொடர்பிலான உரிய ஆவணங்களை அலுவலக நேரத்தில் சபையின் செயலாளரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் குறித்த சந்தையின் குத்தகை உரிமையினை இழந்தவராக கருதப்படுவர் என்பதனையும் கவனத்திற் கொள்ளவும் என்று ஏறாவூர் நகர சபையினால் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அட்டாளைச்சேனை பிரதேசசபை வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து





(பாறுக் ஷிஹான்)

வீதியில் பயணம் செய்த அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை மீறி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரிப்பத்தான்சேனை வீதியினூடாகப் பயணம் செய்த நிலையில் வேகக்கட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியாமல் பிக்கப் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தின் போது வாகனத்தில் பயணம் செய்திருந்தனர் எனக் கூறப்படும் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் உட்பட இருவர் காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் வாகனம் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இரு வேறு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கொண்டதில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தேசிய வளங்கள் விற்பனைக்கு எதிராக கொழும்பில் போராட்டம்





தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கொழும்பில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகம், பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் தொழிற்சங்கத்தினர் ஒன்றிணைந்து நேற்று (புதன்கிழமை) கொழும்பு,கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

துறைமுகம், பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் தொழிற்சங்கத்தினர் இலங்கை மின்சார சபை முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு, கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை பேரணியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேரணி காரணமாக கோட்டை தனியார் பஸ் நிலையம் தொடக்கம், கோட்டை ரயில் நிலையம் வரை கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாக சென்று ஜனாதிபதி செய லகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் மகஜரை கையளிக்க முயன்ற சந்தர்ப்பத்தில் பாதுகாப்புத் தரப்பினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடும் ஏற்பட்டது. இதன்போது பெற்றோலியம், துறைமுகங்கள் மற்றும் மின்சார ஒன்றிணைந்த அமைப்பு ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் கருத்து தெரிவிக்கையில்,

நீங்கள் இதனை மீளப்பெற வேண்டும். எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு வழங்கி, எண்ணெயை விநியோகிக்கும் ஏகபோக உரிமையை இந்தியாவின் பல நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு பேச்சு இடம்பெறுவதாக அறிய முடிகின்றது.

இதனால்தான் நாம் பேச்சுகளுக்கு அழைப்பு விடுத்தோம். எதுவும் இடம்பெறவில்லை. திருட்டுத்தனமாக செய்த ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரியாதாம். இது மிக ஆபத்தான விடயம். எங்கள் வியர்வையால், இரத்தத்தால் உருவானது. அதனை விற்பனை செய்ய அனுமதிக்கமாட்டோம். நாங்கள் எங்கள் இறுதித் தீர்மானத்துக்கு முன்னதாக நாம் உங்களிடம் இந்த மகஜரை கையளிக்கின்றோம்.

மீளப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் உங்கள் பெட்டிகளை எடுத்துக் கொண்டு தாய்நாட்டுக்கு செல்லுங்கள். கோட்டாபய மற்றும் பஸிலுக்கு வேறு நாடுகள் காணப்படுகின்றன.

எமக்கு வேறு நாடுகள் இல்லை. மரம் கொத்தி வாழை மரத்தை கொத்தியுள்ளது. பிரச்சினை எமக்கில்லை. உங்களுக்குத் தான். நாட்டின் மிக முக்கியமான மூன்று இடங்களில் அரசாங்கம் கைவைத்துள்ளது. இது நல்லதுக்கு அல்ல.

நாங்கள் மகஜரைக் கையளித்து இரண்டு மூன்று நாள்கள் மாத்திரமே நாம் பொறுமை காப்போம். அதன் பின்னர் எங்களது மிகப்பெரிய வேலை நிறுத்தத்தை நாங்கள் மேற்கொள்ளவுள்ளோம் என்பதைக் கூறிக்கொள்கின்றோம். – என்றார்.



## பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பெருந்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது

மன்னார், மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்த பெருவிழா திருப்பலி நேற்று (புதன்கிழமை) கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பேசாலை பங்குத்தந்தை அருட்தந்தை ஏ.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார், மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல்பெர்னாண்டோஆண்டகை, அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், அருட் தந்தை எமிலியானுஸ் பிள்ளை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெற்று மறைமாவட்ட ஆயரால் திருச்சொரூபஆசிபக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் போது அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் கிராம மக்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகக் கலந்து கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக மேற்படி ஆலயத்தின் திருவிழா கடந்த 2 வருடங்களாக இடம்பெறாத நிலையில் இந்த வருட திருவிழா சிறப்பாக இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மரக்கடத்தல் வவுனியாவில் ஒருவர் கைது



சட்டவிரோதமான முறையில் காட்டை அழித்து முதிரை மரக் குற்றிகளை கடத்திய ஒருவரை கைது செய்துள்ளோம் என வவுனியா பறயனாலங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பறயனாலங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீலியாமோட்டை பகுதியில் முதிரை மரக்குற்றிகள் வெட்டப்படுகின்றன எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்படி பகுதியில் நேற்று (புதன்கிழமை) சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

காட்டுப்பகுதியில் தொடர்ச்சியாக மரக்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளதுடன் சுமார் இரண்டு ஏக்கர் அளவிலான காட்டுப்பகுதியில் இருந்த முதிரை மரங்கள் மற்றும் பெறுமதியான மரங்கள் வெட்டிக் கடத்தப்பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் அரசுக்குச் சொந்தமான அந்தக் காணியை அபகரிக்கும் நோக்குடன் கஜு மரங்களையும் அங்கு நாட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் காடுகள் அழிக்கப்பட்டுவரும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன எனத் தெரிவித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவ்வாறான நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் திடீரெனகீழே விழுந்து யாழில் சாவுஸ

யாழ்.வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொல்புரம் மத்தி பகுதியில் சிறுவன் ஒருவன் நேற்று (புதன்கிழமை) விளையாடிக்கொண்டிருந்த வேளை கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். மேற்படி சிறுவன் அவனது சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்த வேளை திடீரென கட்டடத்திலிருந்து கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த சிறுவன் மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் ஜெயச்சந்திரன் தஜிதரன் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுவர் இல்லத்தில் இருந்து மாயமான ஐந்து சிறுமிகள்!

### பொலிஸார் வலை வீச்சு

வத்தேகம – மீகம்மன பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் இருந்து ஐந்து சிறுமிகள் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சிறுமிகள் சிறுவர் இல்லத்துக்கு அருகிலுள்ள பாடசாலைக்கு கல்வி நோக்கத்துக்காக அனுப்பிய போது, கடந்த 6 ஆம் திகதி இரவு 11 மணியளவில் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தப்பியோடியவர்களில் ஒருவர் நாவலப்பிட்டியில் உள்ள அவரது வீட்டில் இருக்கிறார் என தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அவரை வத்தேகம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வருமாறு பாதுகாவலருக்கு பணிப்புரை விடுத்துள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏனைய நான்கு சிறுமிகளும் 16–18 வயதுடையவர்கள் எனவும், இந்தச் சம்பவம் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கப்பெறவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமிகள் புஸ்ஸல்லாவ, உடிஸ்பத்துவ, ஹன்டெஸ்ஸ மற்றும் வத்தேகம பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களை கண்டு பிடிக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2021இல் வெளியிடப்பெற்றது.